بسم الله الرحمن الرحيم

# காலை மாலை ஓதவேண்டிய ஆதாரப்பூர்வமான திக்ர்கள்

❶

அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மாலை நேரத்தை அடையும்போது, (பின் வரும் திக்ரை) ஓதுவார்கள்:

«أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلَّهِ، وَالْحَمْدُ لِلَّهِ لَا إِلَـهَ إِلَّا اللهُ، وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، لَهُ الْمُلْكُ وَلَهُ الْحَمْدُ وَهُوَ عَلَىٰ كُلِّ شَيْءٍ قَدِيرٌ، رَبِّ أَسْأَلُكَ خَيْرَ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَخَيْرَ مَا بَعْدَهَا، وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا فِي هَذِهِ اللَّيْلَةِ وَشَرِّ مَا بَعْدَهَا، رَبِّ أَعُوذُ بِكَ مِنَ الْكَسَلِ وَسُوءِ الْكِبَرِ، رَبِّ أَعُوذُ بِكَ مِنْ عَذَابٍ فِي النَّارِ وَعَذَابٍ فِي الْقَبْرِ»

இவ்வாறே நபி (ஸல்) அவர்கள் காலைப் பொழுதை அடையும்போது ((أَمْسَيْنَا وَأَمْسَى الْمُلْكُ لِلَّهِ)) என்ற இடத்தில் «أَصْبَحْنَا وَأَصْبَحَ الْمُلْكُ لِلَّهِ» என்று கூறி (மற்றதையும் ஓது)வார்கள்.

பொருள்: நாங்கள் மாலைப் பொழுதை அடைந்தோம். மாலைப் பொழுதின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே. அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணை யாருமில்லை.

அவனுக்கே ஆட்சியதிகாரம் உரியது. எல்லாப் புகழும் அவனுக்கே உரியது. அவன் அனைத்தின் மீதும் ஆற்றல் உள்ளவன். என் இறைவா! இந்த இரவிலுள்ள நன்மையையும் அதற்குப் பின்னுள்ள நன்மையையும் உன்னிடம் நான் வேண்டுகிறேன்.

இந்த இரவிலுள்ள தீங்கிலிருந்தும் அதற்குப் பின்னுள்ள தீங்கிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன். என் இறைவா! உன்னிடம் நான் சோம்பலிலிருந்தும் முதுமையின் கேட்டிலிருந்தும் பாதுகாப்புக் கோருகிறேன். என் இறைவா! நரக நெருப்பிலுள்ள வேதனையிலிருந்தும் மண்ணறையிலுள்ள வேதனையிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புக் கோருகிறேன்.

ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 2089,2088

அடுத்த அறிவிப்பில்:

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْكَسَلِ وَالْهَرَمِ وَسُوءِ الْكِبَرِ وَفِتْنَةِ الدُّنْيَا وَعَذَابِ الْقَبْرِ

பொருள்: யா அல்லாஹ்! சோம்பலிலிருந்தும் தள்ளாமையிலிருந்தும் முதுமையின் கேட்டிலிருந்தும் இம்மையின் சோதனையிலிருந்தும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 5269

அபூ தாவுதில் உள்ள அறிவிப்பில்:

وَمِنْ سُوءِ الْكِبَرِ أَوِ الْكُفْرِ

பெருமையின் கேட்டிலிருந்தும் இணைவைப்பிலிருந்தும் (உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன்). ஆதாரம்: அபூ தாவுத்: 5071.

❷

அபூ அபூ ஹுரைரா (ரளி) அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் காலை நேரத்தை அடையும்போது, (பின் வரும் திக்ரை) ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ بِكَ أَصْبَحْنَا، وَبِكَ أَمْسَيْنَا، وَبِكَ نَحْيَا، وَبِكَ نَمُوتُ، وَإِلَيْكَ النُّشُورُ.

பொருள்: யா அல்லாஹ்! உன் மூலமாக நாங்கள் காலை நேரத்தை அடைந்தோம். மேலும் உன் மூலமாக நாங்கள் மாலை நேரத்தை அடைந்தோம். மேலும் உன் மூலமாக நாங்கள் உயிர் வாழ்கின்றோம். மேலும் உன் மூலமாக நாங்கள் மரணத்தை அடைகின்றோம். மேலும் உன் பக்கமே (மரணத்திற்குப் பிறகு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு) எழுப்பப்படுதல் உண்டு.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மாலை நேரத்தை அடையும்போது, (பின் வரும் திக்ரை) ஓதுவார்கள்:

اَللّٰهُمَّ بِكَ أَمْسَيْنَا، وَبِكَ أَصْبَحْنَا، وَبِكَ نَحْيَا، وَبِكَ نَمُوتُ، وَإِلَيْكَ الْمَصِيرُ

பொருள்: யா அல்லாஹ்! உன் மூலமாக நாங்கள் மாலை நேரத்தை அடைந்தோம். மேலும் உன் மூலமாக நாங்கள் காலை நேரத்தை அடைந்தோம். மேலும் உன் மூலமாக நாங்கள் உயிர் வாழ்கின்றோம். மேலும் உன் மூலமாக நாங்கள் மரணத்தை அடைகின்றோம். மேலும் உன் பக்கமே (நாங்கள்) மீளுதல் உண்டு. ஆதாரம்: அல் அதபுல் முஃப்ரத்: 1199.

❸

அப்துல்லாஹ் இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பின்வரும் வார்த்தைகளை காலையிலும் மாலையிலும் ஓதாமல் இருந்ததில்லை:

«اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ الْعَافِيَةَ فِي الدُّنْيَا وَالْآخِرَةِ، اَللّٰهُمَّ إِنِّـيْ أَسْأَلُكَ الْعَفْوَ وَالْعَافِيَةَ فِي دِيْنِـيْ وَدُنْيَايَ وَأَهْلِـيْ وَمَالِـيْ، اَللّٰهُمَّ اسْتُرْ عَوْرَتِـيْ وَآمِنْ رَوْعَاتِـيْ، اَللّٰهُمَّ احْفَظْنِيْ مِنْ بَيْنِ يَدَيَّ، وَمِنْ خَلْفِيْ، وَعَنْ يَّمِيْنِيْ، وَعَنْ شِمَالِيْ، وَمِنْ فَوْقِيْ، وَأَعُوْذُ بِعَظَمَتِكَ أَنْ أُغْتَالَ مِنْ تَحْتِيْ»

யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் இவ்வுலகிலும் மறுவுலகிலும் ஆரோக்கியத்தை கேட்கிறேன். யா அல்லாஹ்! நிச்சயமாக நான் உன்னிடம் எனது மார்க்கத்திலும் உலகத்திலும் எனது குடும்பத்திலும் செல்வத்திலும் மன்னிப்பையும் ஆரோக்கியத்தையும் கேட்கிறேன்.

யா அல்லாஹ்! எனது அந்தரங்கங்களை மறைத்து விடு!. எனது அச்சங்களுக்கு பாதுகாப்பு அளி!

யா அல்லாஹ்! எனக்கு முன்னும் எனக்குப் பின்னும் என் வலப்பக்கத்திலிருந்தும் இடப்பக்கத்திலிருந்தும் எனக்கு மேலிருந்தும் என்னைப் பாதுகாப்பாயாக!

உனது மகத்துவத்தைக் கொண்டு எனக்குக் கீழிருந்து நான் அழிக்கப்படுவதை விட்டு பாதுகாப்புத் தேடுகிறேன். ஆதாரம்: அல் அதபுல் முஃப்ரத்: 1200. அபூ தாவுத்: 5074.

❹

அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூபக்கர் (ரளி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரிடம் “அல்லாஹ்வின் தூதரே! நான் காலையிலும் மாலையிலும் சொல்ல வேண்டிய ஒன்றை கற்றுத்தாருங்கள்!” என்று கேட்ட போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) “நீர் காலையிலும் மாலையிலும் இன்னும் தூங்கச் செல்லும் போதும் (பின் வரும் வார்த்தைகளைக்) கூறுவீராக!

اَللّٰهُمَّ عَالِمَ الْغَيْبِ وَالشَّهَادَةِ فَاطِرَ السَّمَاوَاتِ وَالْأَرْضِ، رَبَّ كُلِّ شَيْءٍ وَّمَلِيكَهُ، أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا أَنْتَ، أَعُوْذُ بِكَ مِنْ شَرِّ نَفْسِيْ، وَشَرِّ الشَّيْطَانِ وَشِرْكِهِ.

அல்லாஹ்வே! மறைவானதையும், வெளிப்படையானதையும் அறிந்தவனே! வானங்களையும் பூமியையும் படைத்தவனே! அனைத்துப் பொருட்களின் இறைவனே! அவற்றின் அரசனே! "உன்னைத்

தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை' என்று நான் சாட்சி கூறுகிறேன். எனது நஃப்ஸின் (மன இச்சையின்) தீங்கிலிருந்தும் ஷைத்தானின் தீங்கிலிருந்தும் அவனின் இணைவைப்பிலிருந்தும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். ஆதாரம்: அல் அதபுல் முஃப்ரத்: 1203. அபூ தாவுத்: 5067.

❺

அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: யார் காலையிலும் மாலையிலும் நூறு முறை "சுப்ஹானல்லாஹி வ பிஹம்திஹி" (அல்லாஹ்வின் புகழைக் கொண்டு அவனை நான் தூய்மைப்படுத்துகிறேன்.) என்று சொல்கிறாரோ அவர் கொண்டுவந்த (நல்லறத்)தைவிடச் சிறந்ததை வேறெவரும் மறுமைநாளில் கொண்டு வருவதில்லை; அவர் சொன்ன அளவுக்குச் சொன்னவரையும் அல்லது அதைவிடக் கூடுதலாகச் சொன்னவரையும் தவிர. ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 2692. அபூ தாவுத்: 5091.

❻

(நபி (ஸல்) அவர்களின் துணைவியார்) ஜுவைரியா (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நபி (ஸல்) அவர்கள் சுப்ஹுத் தொழுகைக்குப்பின் அதிகாலையில் என்னிடமிருந்து புறப்பட்டுச் சென்றார்கள். அப்போது நான் எனது தொழுமிடத்தில் அமர்ந்திருந்தேன். பிறகு அவர்கள் முற்பகல் தொழுகை (ளுஹா) தொழுதுவிட்டு வந்தார்கள். அப்போதும் நான் (அதே இடத்தில்) அமர்ந்திருந்தேன். அப்போது என்னிடம், "நான் உன்னிடமிருந்து சென்றது முதல் இதே நிலையில்தான் நீ இருந்துகொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்கள். நான் "ஆம்" என்றேன்.

நபி (ஸல்) அவர்கள், "நான் உன்னிடமிருந்து சென்றதற்குப் பிறகு நான்கு சொற்களை மூன்று முறை சொன்னேன். அவற்றை இன்றைக்கெல்லாம் நீ சொன்னவற்றுடன் மதிப்பிட்டால், நீ சொன்னவற்றை அவை மிகைத்துவிடும். (அவை:)

سُبْحَانَ اللهِ وَبِحَمْدِهِ، عَدَدَ خَلْقِهِ وَرِضَا نَفْسِهِ وَزِنَةَ عَرْشِهِ وَمِدَادَ كَلِمَاتِهِ

பொருள்: அல்லாஹ்வுடைய படைப்புகளின் எண்ணிக்கை அளவுக்கும், அவன் திருப்தியின் அளவுக்கும், அவனது அரியணையின் எடையளவுக்கும், அவனுடைய சொற்களின் எண்ணிக்கை அளவுக்கும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து அவனைத் தூயவன் எனத் துதிக்கிறேன். ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்: 2726.

❼

ஷத்தாத் இப்னு அவ்ஸ் (ரளி) அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

اَللّٰهُمَّ أَنْتَ رَبِّي لاَ إِلَهَ إِلَّا أَنْتَ، خَلَقْتَنِي وَأَنَا عَبْدُكَ، وَأَنَا عَلَى عَهْدِكَ وَوَعْدِكَ مَا اسْتَطَعْتُ، أَعُوذُ بِكَ مِنْ شَرِّ مَا صَنَعْتُ، أَبُوءُ لَكَ بِنِعْمَتِكَ عَلَيَّ، وَأَبُوءُ لَكَ بِذَنْبِي فَاغْفِرْ لِي، فَإِنَّهُ لاَ يَغْفِرُ الذُّنُوبَ إِلَّا أَنْتَ

என்று நீர் கூறுவதே தலைசிறந்த பாவமன்னிப்புக் கோரலாகும்.

பொருள்: அல்லாஹ்! நீயே என் அதிபதி. உன்னைத் தவிர வேறு இறைவன் இல்லை. நீயே என்னைப் படைத்தாய். நான் உன் அடிமை நான் உனக்குச் செய்து கொடுத்த உறுதி மொழியையும் வாக்குறுதியையும் என்னால் இயன்ற வரை நிறைவேற்றியுள்ளேன். நான் செய்தவற்றின் தீமைகளிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோருகிறேன். நீ எனக்கு அருட் கொடைகளை வழங்கியுள்ளாய் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும், நான் பாவங்கள் புரிந்துள்ளதையும் உன்னிடம் (மறைக்காமல்)

ஒப்புக்கொள்கிறேன். எனவே, என்னை மன்னிப்பாயாக! ஏனெனில், பாவத்தை மன்னிப்பவன் உன்னைத் தவிர வேறெவரும் இல்லை.)

இந்தப் பிரார்த்தனையை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் பகலில் கூறிவிட்டு அதே நாளில் மாலை நேரத்திற்கு முன்பாக இறப்பவர் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். இதை நம்பிக்கையோடும் தூய்மையான எண்ணத்தோடும் இரவில் கூறிவிட்டுக் காலை நேரத்திற்கு முன்பே இறந்துவிடுகிறவரும் சொர்க்கவாசிகளில் ஒருவராக இருப்பார். ஆதாரம்: ஸஹீஹுல் புகாரி: 6306